DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

------------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.693/2024**

**P.W.6**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பாபு |
| Father Name | : | சண்முகவேலு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026.

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது ஊமச்சிகுளம் அன்னை வேல் சிட்டியில் வசித்து வருகிறேன். மதுரை மாநகராட்சியில் மின்சார பிரிவில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 01.07.2023ம் தேதி காவல் ஆய்வாளர் ஒருவர் அன்னைவேல் சிட்டி இருக்கும் பகுதியை பார்த்து நான் என்ன சார் என்று போய் நின்றேன். அவர் படம் வரைந்தார். அதில் கையொப்பம் கேட்டார்கள், நான் அதில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

02.07.2023ம் தேதி அதிகாலை சுமார் 12.30 மணியளவில் போலீஸார் வந்தார்கள். போலீஸார் வந்த பிறகு தான் நான் வீட்டில் இருந்து வந்தேன் என்றால் இல்லை, நானும், சுமார் 10 நபர்களும் சம்பவ இடத்திலேயே பேசிக்கொண்டிருந்தோம். அன்றைய தினம் சம்பவம் நடந்ததால் நாங்கள்

அனைவரும் பேசிக்கொண்டிருந்தோம். நான் 02.07.2023ம் தேதி இரவு 07.30 முதல் 08.30 மணியளவில் செயினை அறுத்ததாக கேள்விபட்டேன். அன்றைய தினம் காவல்நிலையத்தில் புகார்தாரர் புகார் கொடுக்க சென்றார். மீண்டும் அவர்கள் அனைவரும் திரும்பி வந்த போது நாங்கள் அனைவரும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பேசிக்கொண்டிருந்தோம். நான் சொல்வது போல் சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றும் நான் காவல்நிலையத்தில் வைத்து எழுதாத பேப்பிரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.10 17:58:57 +0530